[1975 அக்டோபர் 30

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: நோயாளிகள் ஏராளமான பேர் இருக்கிறார்கள் என்பதில் எந்த மாறுபாடும் இல்லை. ஆனால், வருகிற நோயாளிகளுக்கெல்லாம் படுக்கை வசதி அமைக்க முடியவில்லை. ஒரு கட்டடத்தில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை படுக்கைகள்தான் அமைக்க முடியும் என்ற விகிதாசாரம் இருக்கிறது. குறைந்தபட்சம் இத்தனை படுக்கைகளுக்கு ஒரு டாக்டர் என்ற விகிதாசாரமும் இருக்கிறது. ஒரு டாக்டருக்கு 25-26 நோயாளிகள் என்ற கணக்கு இருக்கிறது. அவர்கள் மருத்துவக் கல்லூரி ஆசிரியராக அல்லாத டாக்டராக-அசிஸ்டென்ட் சர்ஜனாக இருக்கவேண்டும். அவர்கள் இருக்கிறார்கள். அதற்கிடையில் எதிர்பாராத வகையில் அதிக எண்ணிக்கை வரும்போது அவர்களுக்கு எப்படியும் உடனடியாக சிகிச்சை கிடைக்கவேண்டும் என்பதற்கு படுக்கை இல்லாத முறையிலும்கூட, அவர்களை அனுமதிக்க வேண்டும் என்ற ஒரு கடமை உணர்வோடு மருத்துவர்கள் செய்கிறார்கள். அதை நாம் விகிதாசார எண்ணிக்கையில் சேர்த்தால் நம்முடைய அரசின் கடமையை நல்லமுறையில் நிறைவேற்ற முடியாமல் போகும்.

திருநெல்வேலி மாவட்ட உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வுக் கூடங்கள்

* 126 வினா—**திரு. எம். முத்தையா:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளுள் விஞ்ஞான ஆய்வுக்கூடங்கள் அமைக்கப்பெறாமல் உள்ளவை எத்தனை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: திருநெல்வேலி மாவட்டத்தில் 1974-75 ஆம் ஆண்டில் இருந்த 214 உயர்நிலைப் பள்ளிகளில் இதுகாறும் அறிவியல் ஆய்வுக்கூடங்கள் அமைக்கப் பெறாத பள்ளிகளின் எண்ணிக்கை 89 ஆகும். அமைக்கப்பட்டவை 125 ஆகும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இப்பொழுது இம்மாதிரியான உயர்நிலைப் பள்ளிகள் அதிகமாகச் செயல்பட வேண்டும் என்ற எண்ணம் நாடு பூராவிலும் இருக்கின்ற நேரத்தில், அப்படி

1975 அக்டோபர் 30]

ஆரம்பித்திருக்கும் உயர்நிலைப் பள்ளிகளில் ஒரு ஜில்லாவில் மட்டும் 89 உயர்நிலைப் பள்ளிகளில் இந்த லாபரடரி வசதிகள் இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, பொதுவாக தமிழ் நாடு பூராவிலும் இருக்கக்கூடிய இந்த உயர்நிலைப் பள்ளிகளில் லாபரடரி வசதிகள் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஆண்டொன்றுக்கு நாம் கிட்டத்தட்ட 50 முதல் 60 வரையிலும் தான் அறிவியல் ஆய்வுக்கூடங்கள் வைக்க நிதி ஒதுக்கீடு செய்ய முடிகிறது. ஏற்கெனவே ரூ. 40,000 ஒதுக்கியிருந்தோம். இப்பொழுது விலைவாசி ஏற்றத்தின் அடிப்படையில் ரூ. 55,000 ஒதுக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆண்டொன்றுக்கு ஐம்பது என்ற அளவில்தான் ஒதுக்கும் அளவில் கிட்டத்தட்ட 1967 முதல் 1975 ஆம் ஆண்டு வரையில் 758 அறிவியல் ஆய்வுக் கூடங்களுக்கு நிதி ஒதுக்கீடு அடிப்படையில் செய்யப்பட்டிருக் கிறது. ஆனால், மற்றப் பள்ளிகளும் இதில் சேரவேண்டும் என்பதற்காகத்தான் நடமாடும் அறிவியல் ஆய்வுக்கூட உந்து வண்டிகள் ஏற்படுத்தப்பட்டு ஒவ்வொரு கல்வி மாவட்டத்திற்கும் ஒரு இயங்கும் அறிவியல் ஆய்வுக்கூடம் இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் இதுவரை 25 கல்வி மாவட்டங்களில் பயன் படுத்திவருகிறோம். இந்த ஆண்டு மேற்கொண்டு ஐந்து உந்து வண்டிகள் வாங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக் கின்றன. இதனால் தற்போதுள்ள 48 கல்வி மாவட்டங்களுள் 30 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ஆய்வுக்கூட உந்து வண்டி பணிபுரியும் நிலை விரைவில் ஏற்படும். அறிவியல் ஆய்வுக் கூடங்கள் இல்லாத பள்ளிகளுக்கு உடனடியாக ஆய்வுக் கூட வசதி செய்து கொடுக்க முடியாவிட்டாலும் அவர்களும் அதன் பயனை அடையும் வகையில் இயங்கும் ஆய்வுக் கூடங்கள் செயல்படுகின்றன. அந்த இயங்கும் ஆய்வுக்கூடங்களை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். அந்தவகையில் கிட்டத்தட்ட 25 இயங்கும் ஆய்வுக்கூடங்கள் செயல்பட்டு வருகின்றன.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, ஆய்வுக் கூடங்கள் இல்லாத காரணத்தால் மாணவர்களுக்கு பரீட்சை பாதிக்கப்படுகிறது. ஆகவே இன்னும் எத்தனை ஆண்டுக்குள்ளாக எல்லாப் பள்ளிகளுக்கும் அறிவியல் ஆய்வுக்கூடங்கள் அமைக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

[1975 அக்டோபர் 30

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதற்கு ஒரு காலவரையறை ஏற்படுத்த முடியாது. ஏனென்றால் ஆண்டுக்காண்டு 50, 60 ஆய்வுக்கூடங்கள் ஏற்படுத்த அனுமதி வழங்கிக் கொண்டிருக்கிறோம். அதேநேரத்தில் ஆண்டுக்காண்டு 60, 70 புதிய உயர்நிலைப் பள்ளிகள் உருவாகி வருகின்றன. அதைக் கருத்திற்கொண்டுதான் அறிவியல் ஆய்வுக்கூடம் இல்லா விட்டாலும் அந்தக் குறைபாட்டைப் போக்கும் வகையில் இயங்கும் ஆய்வுக்கூடங்களை அமைத்திருக்கிறோம். தற்போது சுமார் 25 இயங்கும் அறிவியல் ஆய்வுக்கூடங்கள் இயங்கி வருகின்றன.

திரு. எம். சுரேந்திரன் : சார், அமைச்சரவர்கள் சொன்ன பதில் அரசாங்க உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தது என்று கருதுகிறேன். தனியார் உயர்நிலைப் பள்ளிகள் இதுபோன்ற ஆய்வுக்கூடம் இல்லாமல் எத்தனை இருக்கின்றன? அம்மாதிரிப் பள்ளிகளில் அவர்களே ஆய்வுக்கூடங்களை அமைக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்த அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தனியார் பள்ளிகளையும் சேர்த்துத்தான் சொல்லியிருக்கிறேன். ஆனால் தனியார் பள்ளிகள் எத்தனை, அரசாங்கப் பள்ளிகள் எத்தனை என்பதற்கான புள்ளிவிவரங்கள் இல்லை. பெரும்பாலான தனியார் பள்ளிகளில் ஆய்வுக்கூடங்களை அவர்களே ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். பல தனியார் பள்ளிகளில் அறிவியல் ஆய்வுக்கூடங்கள் இருக்கின்றன. அதுமட்டுமல்ல, மிக வசதி குறைந்த சில தனியார் பள்ளிகளுக்கும் கூட, அறிவியல் ஆய்வுக்கூடத்தைப் பொறுத்தவரையில் 75 சதவிகிதம் நிதி உதவி செய்கிறோம். ஆய்வுக்கூடத்திற்குச் செலவாகும் 55,000 ரூபாயில் கிட்டத்தட்ட 40,200 ரூபாயை நாம் உதவி நிதியாகத் தருகிறோம். மற்றவைகளை அவர்கள் தர வேண்டும். அதுவும் ஆண்டு ஒன்றுக்கு 6 அல்லது 7 பள்ளி களுக்குத்தான் செய்ய முடியும். இப்போது பல தனியார் பள்ளிகளில் அறிவியல் ஆய்வுக்கூடங்கள் இருக்கின்றன. இல்லாத பள்ளிகளில் வைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.